# எல்லா வயதினருக்கும் உகந்த வீடுகளைக் கட்டித் தருதல்

## விருப்பங்களை ஈடேற்றுதல், சமூகங்களை வலுப்படுத்துதல்

வீடமைப்பு வளர்ச்சிக் கழகம் (HDB) கூடுதலான தேவைக்கேற்ப கட்டித் தரப்படும் (BTO) வீடுகளை நல்ல இடங்களில் கட்டவுள்ளது. பிளஸ் வீடுகள் கூடுதல் நிதியுதவியுடன் விற்கப்படும் போதிலும், அவற்றுக்கு மேலும் இறுக்கமான நிபந்தனைகள் உள்ளன. மறுவிற்பனை வீடுகளை வாங்குவோருக்கு $14,000 வருமான உச்ச வரம்பு அவற்றுள் ஒன்று. 10 சிங்கப்பூர்க் குடும்பங்களில், 8 குடும்பங்களுக்கு அது பொருந்தும். அத்தியாவசியத் தேவைக்காக வீடு வாங்க விரும்புவோருக்கு ஆதரவளிக்கவும், வருங்காலத்தில் வீடு வாங்குவோருக்கு கட்டுப்படியான வீடுகளை அளிக்கவும் இவை முற்படுகின்றன.

**2024ஆம் ஆண்டின் இரண்டாம் பாதி முதல், புதிய BTO வீட்டுத் திட்டங்கள் அவற்றின் இருப்பிட பண்புகளைப் பொறுத்து வகைப்படுத்தப்படும்.**

| வகைப்பாடு | இருப்பிடம் | நிதியுதவிகள் | நிபந்தனைகள் |
|---|---|---|---|
|  அடிப்படை (Standard) | HDB வீடுகளில் ஆகப்பெரிய வகை | குறிப்பிடத்தக்க சந்தை தள்ளுபடிகள் | அனைத்து BTO வீடுகளுக்கான அடிப்படை நிபந்தனைகள் பின்வருமாறு:<br>• 5-ஆண்டு குறைந்தபட்சக் குடியிருப்புக் காலகட்டம் (MOP)<br>• வீடு முழுமையும் வாடகைக்கு அனுமதிக்கப்படும் *(HDBயின் அனுமதிக்கு உட்பட்டு)*<br>• மறுவிற்பனை வீடு வாங்குவோருக்கு வருமான உச்சவரம்பு கிடையாது |
| புதிது  பிளஸ் (Plus) | விருப்பத்தக்க இடங்கள்<br>*நகர மையத்திற்கு அருகாமை, நல்ல இணைப்புநிலை, சுற்றுப்புற வசதிகள் அல்லது தனித்துவமான அம்சங்களைக் கொண்டிருப்பது (எ.கா. நீர்முனைக்கு அருகில் அமைந்திருப்பது)* | மேலும் அதிகமான நிதியுதவிகள் | <u>**மேலும் இறுக்கமான நிபந்தனைகள்:**</u>[1]<br>• $14,000 வருமான உச்சவரம்பு<br>– மற்ற குடும்பங்கள் தற்போது மீதமுள்ள 1.1 மில்லியன் மறுவிற்பனை வீடுகளை வாங்க முற்படலாம்<br>• மறுவிற்பனைக்குப் பிறகு நிதியுதவி மீட்டுக்கொள்ளப்படும் *(முதன்மை வீடுகளைவிடக் குறைவு)*<br>• 10-ஆண்டு MOP<br>• வீடு முழுமையும் வாடகைக்கு அனுமதிக்கப்படாது |
|  பிரைம் (Prime) | ஆகச் சிறப்பான, விருப்பமான இடங்கள்<br>*மையப்பகுதியில் அமைந்திருப்பது, சிறந்த இணைப்புநிலை, விரிவான சுற்றுப்புற வசதிகள் அல்லது தனித்துவமான அம்சங்களைக் கொண்டிருப்பது* | ஆக அதிகமான நிதியுதவிகள் | <u>**ஆக இறுக்கமான நிபந்தனைகள்:**</u>[1]<br>• வருமான உச்சவரம்பு:குடும்பங்களுக்கு $14,000, ஒற்றையருக்கு $7,000<br>• விற்பனைக்குப் பிறகு நிதியுதவி மீட்டுக்கொள்ளப்படும்<br>• 10-ஆண்டு MOP<br>• வீடு முழுமையும் வாடகைக்கு அனுமதிக்கப்படாது |

*1 மறுவிற்பனை தகுதிநிபந்தனைகளில், வீடு வாங்குவோரில் குறைந்தது ஒரு சிங்கப்பூரர் இடம்பெற்றிருக்கவேண்டும், தனியார் சொத்து உரிமையாளர்கள் தங்கள் தனியார் சொத்தை விற்ற பிறகு, 30 மாதம் காத்திருக்கவேண்டும் ஆகியவை அடங்கும்.*

**தற்போதுள்ள 1.1 மில்லியன் வீடுகளுக்கான நிபந்தனைகளில் மாற்றங்கள் ஏதுமில்லை.**

**மேல்விவரங்களுக்கு, www.mnd.gov.sg/bto-classification**

